நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.151/2021

அரசு தரப்புக்காக அ.சா. 4 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கீதா | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 5 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day of January 2026.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 04.10 )

நான் தற்போது திட்டக்குடி தாலுக்கா மோசட்டை என்னும் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டை நிர்வாகம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன சாந்தி எனது அக்கா உறவுமுறை. ஆஜர் எதிரிகளில் 1–ம் எதிரியை எனக்கு தெரியும். 1–ம் எதிரி கிளிஜோசியம் பார்ப்பார் இறந்துபோன சாந்தி என்னை கூப்பிட்டு 1–ம் எதிரி இறந்துபோன சாந்தியின் வீட்டில் ஜோசியம் பார்த்தார். சாந்தி இறப்பதற்கும் ஒரு 20 நாட்கள் முன்பு அவ்வாறு 1–ம் எதிரி ஜோசியம் பார்த்தார். நான் சாந்தி வீட்டில் ஜோசியம் பார்த்துவிட்டு வந்துவிட்டேன். நான் ஜோசியம் பார்த்துவிட்டு வந்த பிறகு 20 நாட்களில் சாந்தி இறந்துவிட்டார். எனது வீடு

மோசட்டையில் உள்ளது. சாந்தி விருத்தாசலத்தில் குடியிருந்தார். சாந்தி கழுத்தில் கத்தி குத்தப்பட்டு இறந்துவிட்டார். போலிசார் என்னை சாந்தி இறந்ததற்காக போன் செய்து கூப்பிட்டு விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறந்துவிட்டதை கேள்விப்பட்டு நான் போனேனா என்றால் இல்லை. சாந்தியின் பிரேதத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலிசார் எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் காலை 10.00 அல்லது 10.30 மணிக்கு சாந்தி இறந்த அன்று காவல்நிலையத்தில் அழைத்து விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது 1–ம் எதிரி சாந்தியின் வீட்டில் தங்கி ஜோசியம் பார்த்ததாக சொன்னேன். போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 3 முறை விசாரித்தார்கள். போலிசார் 22.11.2020 தேதியில் எதிரிகளை பிடித்து வைத்திருந்த நாளில் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அப்போது என்னுடன் சேர்ந்து நிறைய சாட்சிகள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். எதிரிகள் என்னிடமும் போலிசாரிடமும் பேசவில்லை என்றால் பேசவில்லை. நான் என்ன நடந்தது என்று ஆய்வாளரிடம் சொன்னேன். போலிசார் விசாரித்தபோது முருகன் என்ற நபரிடம் ஜோசியம் பார்த்ததாக சொன்னேனா என்றால் சொல்லவில்லை. இறந்த சாந்தி ஜோசியம் பார்த்த நபர் தன் வீட்டில் தங்கி இருந்ததாக என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். காவல்நிலையத்தில் முருகன் என்பவர் இருந்ததாக நான் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. நான் முருகன் என்று போலிசாரிடம் எதுவும் சொல்லவில்லை. ஒரு நபரிடம் கிளிஜோசியம் பார்த்ததாக சொன்னேன். காவல்நிலையத்தில் என்னை அழைத்து விசாரிக்கும்போது தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் வெள்ளை சட்டை போட்ட 1–ம் எதிரியிடம் கிளி ஜோசியம் பார்த்தீர்களா என்று போலிசார் கேட்டார்கள் நான் கிளிஜோசியம் பார்த்தேன் என்று சொன்னேன். 1–ம் எதிரியின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முருகனிடம் கிளி ஜோசியம் பார்த்ததாக நான் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. முருகன் என்பவர் தான் இறந்துபோன சாந்தியுடன் தங்கி இருந்தார் என்றும் அவரை காப்பாற்றுவதற்காக எதிரிகள் மீது வழக்கு

போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. முருகன் என்பவர் எம்.எல்.ஏ–க்கு ஜோசியம் பார்ப்பவர் என்றாலும் அவரை காப்பாற்றுவதற்காக எதிரிகள் மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்று சொன்னால் முருகன் என்பவரை எனக்கு தெரியாது.

**மறு விசாரணை** இல்லை.

(முடிக்கப்பட்ட நேரம் 04.24 )

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.